**O.S.104/2020**

Date: **09.10.2025**

Pw–1 – சேவியர் த/பெ.மலையப்பன்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்:–**

1. என் தாத்தா பெயர் தேவசகாயம் என்றால் சரிதான். இவ்வழக்கு 2ம் பிரதிவாதி பாக்கியநாதன் என் தகப்பனாரின் உடன்பிறந்தவர் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் என் தகப்பனாருக்கு என் தாத்தா தேவசகாயம் எழுதிகொடுத்த பதிவு நன்கொடை ஆவணம் மூலம் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். என் தகப்பனாருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 3 பிள்ளைகள். என் தகப்பனார் என் மீது விக்கிரமசிங்கபுரம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான், பாத்ரூம் கட்டும்போது வீட்டை இடித்ததாக புகார் கொடுத்திருந்தார். அந்த புகார் 2020ல் கோவிட் ஊரடங்கு காலத்தில் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். காவல்நிலையத்தில் என் அப்பாவிற்கு ஜீவனாம்சம் கொடுக்க சொன்னார்கள் என்றால் சரியல்ல. என் அப்பா பிள்ளைகள் சாப்பாட்டிற்கு பணம் கொடுக்கவில்லை என கூறி புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி சுப்பிரமணியத்திற்கும், எனக்கும் விரோதம் உண்டா என்றால் இல்லை. என் தகப்பனாருக்கும், 2ம் பிரதிவாதி பாக்கியநாதனுக்கும் விரோதம் உண்டா என்றால் இல்லை. அவர்கள் இருவரும் பேசிக்கொண்டுதான் இருக்கிறார்கள் என்றால் 2012க்கு பிறகுதான் பேச்சுவார்த்தை உள்ளது.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கானது ஒத்திவைக்கப்படுகிறது)

Sd/-**சேவியர்**

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பித்து சாட்சி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்ட பின்பு என்னால் சான்றொப்பம் இடப்பட்டது.

P PRAVEEN JEEVA

Uploaded on 09.10.2025
Digitally signed by P PRAVEEN JEEVA
Date: 2025.10.09 17:09:34 +0530

மு.மா.உ.நீ

அம்பாசமுத்திரம்.